028373

Email 7.08.2020 11:35 Am

| | |
|---|---|
| அனுப்புநர்<br>டாக்டர்.மு.வீரப்பன், எம்.பி.பி.எஸ்,<br>மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் முதல்வர்,<br>அரசு அலுவலர் பயிற்சி நிலையம்,<br>பவானிசாகர் - 638 451,<br>ஈரோடு மாவட்டம். | பெறுநர்<br>இயக்குநர்,<br>பள்ளிக் கல்வித் துறை,<br>கல்லூரி சாலை,<br>சென்னை – 600 006 |

ந.க.எண். அ9/408/2020      நாள்: 27.07.2020

ஐயா,

| | |
|---|---|
| பொருள் | பயிற்சி — அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர் - வேலூர் மையம் -இளநிலை உதவியாளர்கள்/ உதவியாளர்களுக்கான 37 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி (Non Residential) அணி எண் 9 — 07.02.2020 முதல் 17.03.2020 வரை நடைமுறைப்படுத்தியது — தேர்வு முடிவுகள் அறிவிக்கப் பெற்றது — பயிற்சி அணி முடிவுக்குக் கொண்டுவரப்பெற்றது தொடர்பாக |
| படிக்கப் பட்டது | 1. பயிற்சித் துறைத் தலைவர் கடித எண். பதுத/959/2020, 20.01.2020<br>2. அரசு கடித (நிலை) எண் 77 ப.ம.நி.சீ (ப1)துறை நாள் 13.07.2020.<br>3. கூடுதல் பயிற்சித்துறைத் தலைவர் (பொ), கடித எண். பதுத/727/2019 நாள் 20.07.2020 |

பார்வை ஒன்றில் காணும் பயிற்சித் துறைத் தலைவர் ஆணைக்கிணங்க, (வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்கள் உட்பட) இளநிலை உதவியாளர்கள்/ உதவியாளர்களுக்கான 37 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி (அணி எண் 9), தங்கிப் பயிலும் வசதியின்றி, வேலூர் மாவட்ட சிறப்பு பயிற்சி மையத்தில் (Vellore Institute of Technology at Katpadi), 07.02.2020 முதல் 20.03.2020 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், கொரோனா தொற்று காரணமாக அப்பயிற்சி அணி 17.03.2020 உடன் நிறுத்தி வைக்கப்பட்டு, பயிற்சியாளர்கள் 17.03.2020 பி.ப. பயிற்சியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

பார்வை இரண்டு மற்றும் மூன்றில் காணும் அரசுக்கடிதங்களின்படி, அப்பயிற்சி அணியை 17.03.2020 உடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, பயிற்சியினை நிறைவு செய்யப்பட்டு, பயிற்சியாளர்களின் தேர்ச்சி முடிவினை 24.07.2020 அன்று இணையதளம் வழியாக வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் துறையிலிருந்து பயிற்சி பெற்று வந்த பயிற்சியாளர்கள் 17.03.2020 பிற்பகல் பயிற்சியினின்றும் விடுவிக்கப்பட்டுள்ளனர். பயிற்சி நிறைவு செய்ததற்கான தேர்வு முடிவுச் சான்றுகளையும், பயிற்சியாளர்கள் பயிற்சியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கான விடுவிப்புச் சான்றுகளையும், இப்பயிற்சி நிலைய (www.cstibhavanisagar.org.in) என்ற இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறும், அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்பட்ட மதிப்பெண் பட்டியலை அதிலுள்ள QR Code-ன் மூலம் உண்மைத்தன்மையை அறிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் மதிப்பெண் பட்டியல் (Hot Copy) தபாலில் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் உரிய பயிற்சியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ள ஆவன செய்யுமாறும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

27/7/20

மா.வ.அ./முதல்வர்

Scanned with CamScanner

திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம்

ந.க. எண். 689/அ1/2020. நாள். -08.2020

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம், மாவட்ட வருவாய் அலுவலர்/முதல்வர் அவர்களின் செயல்முறை கடித ந.க. எண். அ9/408/2020, நாள். 27.07.2020-ன் படி கடிதம் அனைத்து வட்டாரக் கல்வி அலுவலகம்/அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி பயிற்சியாளர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள அறிவுறுத்துமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

இணைப்பு: கடிதம்

19.8.20
CHIEF EDUCATIONAL OFFICER,
Tirupattur, TPT.Dist. 635 601.

பெறுநர்,
மாவட்டக் கல்வி அலுவலர்
திருப்பத்தூர்/வாணியம்பாடி.

17.08.2020